திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கிராம நிருவாக அலுவலர் அலுவலகம் கட்ட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதன்மீது, உரிய நடவடிக்கையைத் தாங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறை என்பதனால் துணைக் கேள்வியாகக் கேட்கிறேன். என்னுடைய பெரியகுளம் தொகுதி, ஊஞ்சான்பட்டி பஞ்சாயத்தில் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் 100 நரிக்குறவ மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு 30 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த மக்களுடைய வாரிசுகள் பலபேர் இன்றைக்கு வீதிகளிலே சமைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லாசர், மூலக்கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் திடீரென்று எழுந்திருந்து கேள்வி கேட்டால் எப்படி? (குறுக்கீடு) வாய்ப்பு இல்லை, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் கேள்வி கேட்டால் எப்படி? (குறுக்கீடு) உட்காருங்கள்.

வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

57—

ஆவின் பாலகம்

***52514—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி திருக்கடையூரிலுள்ள அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் உடனுறை அபிராமி அம்மன் திருக்கோவில் பகுதியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

2016 *பிப்ரவரி* 17]

மாண்புமிகு திரு. பி.வி. ரமணா, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

உலகத் தமிழ் மக்களுக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்து, தன்னலம் கருதாமல் பொது நலனையே இலட்சியமாகக் கொண்டு, ஓய்வறியாது உழைத்து, பொற்காலம் படைத்து, மாசற்ற ஆட்சி நடத்தி, பால் வளத் துறைக்குச் சரித்திரச் சாதனையாக 593 கோடியே 65 இலட்சம் ரூபாய் வாரி வழங்கிய அட்சய பாத்திரம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து எனது பதிலினை அளிக்க விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதியில் உள்ள திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் உடனுறை அபிராமி அம்மன் திருக்கோவில் பகுதியில் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29 ஆம் தேதியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் சீரிய உத்தரவுக்கிணங்க ஆவின் பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனை செய்ய திருமதி ஆர்.மோகனா என்பவர் முகவராக நியமனம் செய்யப்பட்டு ஆவின் பாலகம் சிறப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. சு. பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு"

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப நிமிர்ந்த நன்னடை, நிலத்தில் யாருக்கும் அஞ்சா நெஞ்சுரம், வாரி வழங்கும் ஈகைக் குணம், ஆன்றோரின் அடங்கிய அறிவு, அயராது உழைத்திடும் ஆற்றல், ஆல் போல் தழைத்திடும் அம்மாவின் ஆட்சியிலே தமிழகம் வெண்மைப் புரட்சியிலே முதலிடம், கிராமப் பொருளாதாரம் தழைக்க கால்நடை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தமிழகத்திலே ஆதரவற்ற 60,000 ஏழைப் பெண்களுக்குக் கறவைப் பசுக்கள் வழங்கி அவர்கள் வாழ்விலே ஒளியேற்றிய எங்கள் தாயே! தமிழகத்தின்

திருக்கோயில்களில் குடமுழுக்கு, அன்னதானம் எனப் பாரதத் திருநாட்டின் முன்மாதிரியாய் விளங்கும் எங்கள் தாயே! அகவை 68—ல் அடியெடுத்து வைக்கும் எங்கள் தங்கத் தாயின் பாதங்களில் பணிந்து வணங்குகிறேன் அம்மா!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி திருக்கடையூரிலே, அருள் பாலிக்கும் அமிர்தகடேஸ்வரர் உடனுறை அபிராமி அம்மனுக்கு அழகு சேர்க்கும் வகையிலே, அப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக்கி, பக்தர்களுக்கு தங்கும் விடுதியும் அமைத்திட்ட எங்கள் தாயே! தமிழக மாநில பக்தர்கள் மட்டுமல்ல, வெளி மாநில பக்தர்களும், குழந்தைகளும் என தினம்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் திருக்கடையூருக்கு வருகின்றனர். 59 வயது பூர்த்தியடைந்தவர்களுக்கு உக்கிரசாந்தியும், 60, 61 வயதுடையவர்களுக்கு சஷ்டியப்த பூர்த்தியும், 70 வயது உடையவர்களுக்கு பீமரத சாந்தியும், 80 வயது உடையவர்களுக்கு சதாபிஷேகமும் அங்கு செய்விக்கப்படுவதால் பலரும் பயன் பெற்று வருகிறார்கள். எனவே, பக்தர்கள் நலன் கருதி இந்த அவையிலே நான் கொடுத்த வினாவிற்கு பதில் வருவதற்கு முன்பே திருக்கடையூர் திருக்கோயிலில் ஆவின் பாலகத்தை அமைத்துத் தந்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் கோடானுகோடி நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

58—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***41088—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர் ஒன்றியம், கல்லாநத்தம் ஊராட்சியிலுள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?